உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சிவ கேசாதி பாதாந்த வருணன் ஸ்தோத்திரமும், ஸ்ரீ தச ஸ்லோகி ஸ்தோத்திரமும்.

★

ஸ்ரீ ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள்

அருளிச் செய்தவை

★

தமிழாக்கியவர் :

கவியரசு, வித்துவான், கு. நடேச கவுண்டர், P. O. L.

கோயம்புத்தூர்.

சாற்று கவிகள்.

இந்நூலாசிரியர் மாணவரும், சபர்பன் உயர்நிலைப் பள்ளித்
தமிழாசிரியருமாகிய
வித்துவான் க. கீ. இராமசாமி ஐயர் அவர்கள்
இயற்றியன.

பொங்குபுகழ்க் காலடியாம் பதிமுளைத்து
நால்வேதப் புனல்மிக் கார்ந்து
சங்கையறு பெரும்புலமைக் கிளைபோக்கித்
திசைதோறும் தழைத்துப் பூத்துப்
பங்கமிலாச் சுவைக் கவிதைக் கனியீந்த
தெய்வக்கற் பகமா மாதி
சங்கரரென் றுலகமெலாம் தொழுதேத்து
ஞானநிறை சதுரர் மன்னே (1)

பேசாதி சங்கரர்தாம் சிவனருளில்
திளைத்தன்று பேசி யிட்ட
கேசாதி பாதமொடு தசஸ்லோகீ
தனைத்தமிழிற் கிளந்திட் டானல்
ஏசாத புலமைநிறை இவனன்றே
நன்பாட்டுப் புலவன் என்னத்
தேசாருங் கவியரசு நடேசனெங்கள்
குருமூர்த்தி சிறந்து வாழ்க (2)

அத்தகைய நூலிரண்டின் அருமையெலாம்
நன்குணர்ந்தே அச்சிட் டின்றெம்
கைத்தலத்தில் அமருமா றுதவியவன்
யார்என்னின் கனிந்த பக்தி
மெய்த்தகையன்; அடியவருக் கமுதருளிச்
செல்வமுயர் மேன்மை பூண்டு
சித்தமழ கியசென்னி யப்பனெனும்
ஒருபெயர்கொள் சீமான் மாதோ (3)

திருச்சிற்றம்பலம்

அணிந்துரை

[திரு. சி. சு. கண்ணுயிரம் அவர்கள்,
உதவிப் பங்கீட்டு அலுவலர், கோவை]

“அகளமா யாரும் அறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற
தாஞகத் தந்ததென் றுந்தீபற” [திருவுந்தியார்-1]

கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாத சொரூபத் திருமேனி கொண்ட இறைவன் ஆன்மகோடிகள் தன்னை அறிந்து வழிபட்டு மலப்பிணிப்பினின்றும் விடுதலையடைந்து உய்யவேண்டும் என்ற பெருங்கருணையால் ஒரு வடிவம் தாங்கி எழுந்தருளுகின்ருன். இவ்வடிவில் அவனை வழிபட்டு உய்வதும் உயிர்களுக்கு அரிது. இறைவன் திருவுருவை மனத்தில் நிறுத்தித்தியானிக்க முயலின் அவ் வடிவம் முழுவதும் நெஞ்சில் நிலைத்து நிற்பதில்லை. எனினும் அவ்வடிவின் ஓர் அங்கத்தையேனும், அதுவும் இயலாவிடில் அங்கத்தில் அணிந்துள்ள ஓர் அணியையேனும் ஊன்றித் தியானிக்க முயலின் அதற்கும் உரிய பயன் உண்டு என்று ஆன்ருேர் அறுதியிட்டுரைத்துள்ளனர். அவ்வழியில் உலகர் உய்யும்பொருட்டுச் சிவபரஞ்சுடராகிய முழுமுதற் கடவுளை ஒவ்வோரங்கமாக வருணித்துத் துதிக்கும் நூல்களை நம் முன்ஞேர்கள் ஆக்கிச் சென்றனர். திருவிசைப்பாவில் திருவாலியமுதனர் அருளியுள்ள “பாதாதிகேசம்” இவ்வகையைச் சேர்ந்தது. காவியங்களில் வரும் மனிதர்களைக் கேசாதிபாதமாக வருணிப்பதும் தெய்வங்களைக் கேசாதிபாதம்; பாதாதிகேசம் ஆகிய இரு முறைகளிலும் வருணிப்பதும் மரபு.

ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் சிவபெருமானை இவ்விரு முறைகளிலும் துதிக்கும் வடமொழிச் சுலோகங்களை அருளியுள்ளார்கள். அவற்றை வடமொழியறியாத தமிழ் மக்களும் படித்து இன்புறும்வண்ணம் கோவை கவியரசு வித்துவான் கு. நடேச கவுண்டர் P. O. L. அவர்கள் தமிழில் செய்யுள் வடிவில் மொழிபெயர்த்துதவியுள்ளார்கள். அவை இரண்டினுள் சிவபாதாதி கேசாந்த வருணன ஸ்தோத்திரம் முன்னமேயே பீளமேடு. செந்தமிழ் அருட்செம்மல். திரு. P. S. G. G கோவிந்தசாமி நாயுடு அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. இப்பொழுது சிவகேசாதி பாதாந்த வர்ணன ஸ்தோத்திரம் வெளிவருகின்றது.

இந்நூல் கவியரசு அவர்களுக்கே உரிய கம்பீரமான நடையில் தெளிவும் அழகும் கொண்ட காவிரியின் வெள்ளம்போல் தங்கு தடையின்றிப் பாய்ந்து செல்கின்றது. வெல்லப்பிள்ளையாரின் எல்லாப் பாகமும் சுவைக்கும் என்பதை ஓர் பகுதியின் சுவையைக்கொண்டே அறியலாம் என்பர். ஆனால் இந்நூலின் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு விதமான மதுரச் சுவை பயப்பதால் நூல் முழுவதையும் சுவைத்தே அறிய வேண்டும். எனினும் இரண்டோரிடங்களை மட்டும் சிறிது ஆராய்வோம்.

1) முதற் றிருபாட்டில் இறைவனுடைய சடைகள் ஆற்றின் கரையில் வளர்ந்த புல் போன்றும், தழலில் பொன்போன்றும், நெற்பயிர் போன்றும், துயர்க்குழி நின்று மீட்கும் கயிறு போன்றும் உள்ளனவாக உவமிக்கப்பட்டுள்ளன. இவை உலகில் ஏனைய உயர்நிலை

உயிர்கள் தோன்றுமுன் புல் முதலிய தாவரங்கள் தோன்றின என்ற பரிணாமவாதக் கோட்பாடுகளையும், பின்னர், தோன்றிய உயிர், உணவாகக் கொள்வதற்கு நெல்லும், அவ்வுணவை அட்டுண்பதற்கு நீரும், நெருப்பும், ஏனைய போகம் துய்ப்பதற்குப் பொன்னும், இறுதியில் உய்ந்து வீடடைவதற்குக் கரையேற்றும் கயிறும் ஆகி நிற்பவன் இறைவனே எனும் சமயக் கோட்பாடுகளையும் குறிப்பால் உணர்த்தி நிற்கின்றன.

2) ஐந்தாம் திருப்பாடலில் அடியார்களின் புலன்களாகிய குதிரைகளுக்கு இறைவனின் விழிகள் சாரதிகளாக அமையப் பிரார்த்திக்கின்றார் ஆசிரியர். புலன்கள் தாம் விரும்பிய வழியே சென்று அழிந்தொழியாமல் இறைவனால் செலுத்தப்பெறுமாயின் சிவகதியடைந்து உய்யும். இதைவிடச் சிறந்த பிரார்த்தனையோ—உயிர்கள் பெறும் பேறோ வேறில்லை. இதனையே மாணிக்கவாசகப் பெருமானும் "சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன்" என்று அருளிச் செய்தார்கள்.

3) ஏழாம் திருப்பாட்டில் இறைவனின் மூக்கு, வாயாகிய முழையில் நுழைய முயலும் பாம்பாக வர்ணிக்கப்பட்டுள்ளது. இது பூம்பாவையின் கேசாதி பாத வர்ணனை கூறும் சேக்கிழார் பெருமானின் "நாசியும் பவள வாயும் மணிநிறக் கோபங்கண்டு மற்றது வவ்வத்தாழும் அணி நிறக் காமரூபி அணைவதாம்" என்ற திருவாக்கை நினைவூட்டுகிறது.

4) எட்டாவது திருப்பாட்டில் இறைவனுடைய கண்ணடிபோன்ற கன்னத்தில் உமையம்மை தன்னுடைய சாயலைக் கண்டு தலைவன் இன்னொருத்தியையும் தன்னிடம் கொண்டுள்ளான் என்று ஊடுவதாக வருணிக்கப்பட்டுள்ளது. "மருங்கிற் கொங்கை கொண்டனுங்குங் கொடியிடை காணிற் கொடியளென்றவிர் சடைமுடிமேற் கங்கை கொண்டிருந்தான்" என்று தற்குறிப்பேற்றுகின்றார் கருவூர்த்தேவர். ஆயினும் அவன் அவ்விதம் கங்கையைக் கரந்திருந்ததை இறைவி அறிந்தே இருந்தாள் என்பதும், அக்கங்கையையும் தவிரக் கன்னத்திலும் ஒருத்தியைக் கொண்டுள்ளானே என்ற வியப்பும் பிணக்கும் இத்திருப்பாட்டின் தொடக்கத்தவான "என்னே இன்னொருத்தியை" என்ற சொல்லாற்றலால் பெற வைத்துள்ளது விம்மிதம் தருகின்றது.

5) பதினைந்தாம் திருப்பாட்டுள் இறைவனின் திருமிடற்று நஞ்சு, பாற்கடலில் தன்னுடன் பிறந்த நிலவு, திருமகள் கவுத்துவமணி ஆகிய இறைவனின் திருமுகம், பல்லொளி உதடுகள் எனும் இவற்றைவிட்டு நீங்காமல் அருகிலுள்ள கண்டத்திலேயே நிலைத்திருக்கும்படி தடுத்து நிறுத்திய உமையம்மையை நித்திய சுமங்கலியாக வாழும்படி வாழ்த்திற்று எனக் கூறப்பட்டுள்ளது. எந்தக் கொடிய நஞ்சினால் தேவ மாதர்கள் தங்கள் "செங்கைகளும் கொங்கைகளும் சிவக்க" அமங்கலைகளாகியிருப்பார்களோ அந்தக் கொடிய நஞ்சை உண்டு அவர்களது "காதோலை பாலித்தான்" இறைவன்.

ஆனல் அவன் அப்படியுண்ட நஞ்சு தன்னை அமங்கலை ஆக்கிவிடுமென்று அஞ்சிய இறைவி அதனை அவன் கழுத்திலேயே தடுத்து நிறுத்திவிட்டாள். ஆனல் அந்நஞ்சோ அவளை அதற்காக நித்திய சுமங்கலியாக விளங்கும்படி வாழ்த்திற்று என்ற கற்பனை நயம் நினைந்து நினைந்து இன்புறற்பாற்று.

6) இருபத்தைந்தாம் திருப்பாட்டில் வரையெடுத்த இராவணனை அடர்த்தது இறைவனின் கால்விரல் என்னது விரல் நுனி என்று கூறப்பட்டுள்ளது. இதனை, "குன்று நீ எடுத்த நாள் தன் சேவடிக் கொழுந்தால் வென்றவன்" என்ற கம்பராமாயணப் பாட்டிலும், அதனினும் அழகுற, "கவிழ மலை தளரக் கடகக் கையால் எடுத்தான் தோள் பவழநுனை விரலாற் பையவூன்றிப் பரிந்தாரும்" எனும் ஆளுடைய பிள்ளையார் திருவாக்கிலும் கண்டு இன்புறலாம். இத்திருப்பாட்டிலேயே "தீவினையைத் தீவினை செய்பண்ப" என்னும் அரிய சொல்லாட்சி "தந்தையைத்தீத்தொழில் மூட்டிய கோன்" என வரும் ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதிச் செய்யுளின் பகுதியை நினைப்பித்து இன்பம் பயக்கின்றது.

இந்நயங்களை யெல்லாம் வடமொழியறியாத தமிழ்ச் சைவ மக்களும் அனுபவிக்கும்படி கைம்மாறு கருதாது மொழிபெயர்த்துதவிய கவியரசு அவர்களுக்குச் சைவ உலகம் மிகவும் கடமைப்பட்டுள்ளது.

II. ஸ்ரீ தசஸ்லோகி ஸ்துதி :

இதுவும் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அருளிய வடமொழிச் சுலோகங்களின் தமிழாக்கமே. பத்துச் செய்யுட்களைக் கொண்டது. "சிவயேகோ த்யேய சிவம்கர சர்வம் அந்ய பரித்யஜ்ய" — "பேரின்பத்தைத் தரும் சிவன் ஒருவனே ஏனைய எல்லாவற்றையும் தள்ளிவிட்டுத் தியானிக்கத்தக்கவன்" என்ற வேதமொழியின் ஆணைப்படி சிவபரத்துவம் கூறுவது.

இத்துணைச் சிறந்த இவ்விரு நூல்களையும் எனது அரிய நண்பரும் கோவை - காந்திபுரம் "பத்மாலயா நிதி"யின் தலைவரும் சிவபூஜா துரந்தரருமாகிய திரு. K. சென்னியப்ப கவுண்டர் அவர்கள் அச்சிட்டுத் தமது மைந்தன் செல்வன் பாலசுப்பிரமணியத்தின் பிறந்ததின நினைவாகப் பிலவங்க ஆண்டு சித்திரை மாதம் முதல் தேதியாகிய இன்று கோவை நகரை அடுத்துள்ள மருதமலையில் முருகப்பெருமான் திரு முன்னர் அன்னம் – பாலிப்பு – வழிபாடுகளுடன் வெளியிடுகின்றனர்கள். சைவ உலகின் நன்றி அவர்களுக்கு உரித்தாவதாகுக. மேலும் இத்தகைய சிவ புண்ணியத்தொண்டுகளைத் தொடர்ந்து விரிந்த அளவில் ஆற்றும்படி ஆலவாயின் அவிர்சடை அண்ணல் அவருக்கு எல்லா நன்மைகளையும் அருளப் பிரார்த்திக்கின்றேன்.

"சேக்கிழார் நிலையம்"
371, வைசியாள் வீதி,
கோயம்புத்தூர்.
14—4—1967

சி. சு. கண்ணுயிரம்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ சிவ கேசாதி பாதாந்த வர்ணன ஸ்தோத்திரம்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தங்கள்.

சடைகள்

1 வழங்குகவே நுமக்கேமம் வானாற்றின்
கரையுயர்ந்து வளர்புற் போல்வ
செழுந்தழலிற் பொன்போல்வ செழித்தோங்கி
வளைசெந்நெற் பயிரே போல்வ
விழுந்துயர்ப் படுவாரைக் குழிநின்று
மீட்குநெடுங் கயிறு போல்வ
எழுந்தபவத் தருவெரிக்கும் சிகைபோல்வ
இறைசருவன் சடைகள் தாமே.

[ஏமம் — இன்பம், காவல். வானாறு — தேவ கங்கை. பவத்தரு — பாவமாகிய மரம். சிகை — நெருப்புக் கொழுந்து. இறை — கடவுள். சருவன் என்பது சிவபெருமான் திருநாமங்களில் சிறந்தது ஒன்று.]

திரிபுண்டரம்

2 பரகதிக்குப் போம்வெள்ளிப் படிகளோ
புரந்தரன்வன் பகையா மூன்று
புரவசுரர்தமைப் பொடித்த வெற்றியறி
குறியாகப் பொறித்த கோடோ
கிரியரசாம் நுதல்மீது கிளைத்தபா
கீரதியோ எனுமா தோன்றும்
பரன்மிருடன் வெண்ணீற்று முக்கீற்று
நமக்கேற்றம் பாலிக் கும்மே.

[புரந்தரன் — இந்திரன். கோடு — கீற்று. மூன்று புர அசுரர் — திரிபுரத்து அசுரர்கள். கிரியரசு — இமய மலை. நுதல் — நெற்றி. பாகீரதி — கங்கை. கங்கை மூன்று பிரிவாகி ஓடுவதால் திரிபதகா என்று பெயர் பெற்றது. மிருடன் — சிவபெருமான்.

வெண்ணீற்று முக்கீற்று—மூன்று கீற்றுக்களாக அணிந்த திருநீறு, திரிபுண்டரம்.]

நெற்றிக்கண்

3 ஊடுமுமை திருவடிமேல் பணிந்தபொழு
தங்குட்டத் தொளிரி லாச்சை
யோடுமுர ணுவதாகி நுதற்படிகத்
தழுத்துமணி யொளியிற் ருகிப்
பீடுகெழு தலைக்கங்கை நின்றுவிழும்
சினைக்கெண்டைப் பெற்றித் தாகி
ஆடன்மதன் றனைநீற்று மரனெற்றி
யமர்விழிநும் அரந்தை தீர்க்க.

[*அங்குட்டம் — காற்பெருவிரல். இலாச்சை—செம்பஞ்சுக் குழம்பு. நுதல்—நெற்றி. மணி—மாணிக்கம். பெற்றி—இயல்பு ஆடல் மதன்—வெற்றியுடைய காமன். நீற்றும்—சாம்பலாக்கிய. அரந்தை—துன்பம்.*

சிவபெருமானது நெற்றிக்கண்ணுக்கு உவமையாக ஈண்டுக் கூறப்பட்டவை :— உமையின் ஊடலைத் தணிவிப்பதற்காகச் சிவன் அவள் பாதத்தில் தன் நெற்றி படும்படி வணங்கியபோது, அப்பாதத்தின் பெருவிரலில் பூசியிருந்த செம்பஞ்சுக் குழம்பு சிவனது நெற்றியில் ஒட்டியதுபோலவும், சிவனது நெற்றியாகிய பளிங்குக் கல்லின் மேல் பதித்த மாணிக்க மணி போலவும், அவன் தலையிலுள்ள கங்கை நீரினின்று நழுவி விழுந்த சினைக் கெண்டை மீன் போலவும் இருக்கின்றதாம் நெற்றிக்கண்.

நெற்றிக்கண் மன்மதனைப் பொடியாக்கிய வெற்றியை யுடையது.]

புருவங்கள்

4 கண்ணான பனிக்கதிரோன் சுடுங்கதிரோன்
தமைச்சூழ்ந்த பரிவே டம்போன்
றெண்ணாத வசுரருக்குத் துன்னிமித்த
மாய்த்தொழின்முன் றியற்றி யென்றும்
தண்ணான கருணையெற்குத் தருஞ்சருவா
ணியின்கணவன் புருவம் உங்கள்
எண்ணான விருப்பமெலாம் கைகூட
அருளியென்று மிலக மாதோ.

[சிவபெருமானுக்குச் சந்திரனும் சூரியனும் முறையே இடக் கண்ணும் வலக்கண்ணுமாய் உள்ளன. சந்திர சூரியர்களைச் சூழ்ந்து சில வேளைகளில் பரிவேடம் காணப்படும். அப் பரிவேடமே புருவங்களாக அமைந்துள்ளன சந்திர சூரியர்களை விட்டுத் தனித்துப் பரிவேடங் காணப்படுதல் துன்னிமித்தமாகும். அது அசுரர்களுக்குத் தீங்கு வருதலை அறிவித்ததாகும். ஈசனது மூன்று கண்களும் படைப்பாதி முத்தொழிலையும் செய்வன. இறைவனது திருப்புருவங்கள் உங்களுக்கு விருப்பம் எல்லாம் வழங்கி விளங்குக.

சருவாணி — சர்வனாகிய இறைவனின் மனைவி.]

திருக்கண்கள்

5 மாகனக மலைமகளின் விளையாட்டால்
உலகமிருள் மயமே யாகக்
கோகனகக் கைம்மலரால் மறைக்கப்பட்
டனஅசுரர் குலத்தை வெல்ல
மாகநவி லமரர்படைக் கலமான
தூயபொற்று மறையே போல்வ
ஆகனகச் சிவன்விழிநும் புலப்பரிக்கு
நேத்திரராய் அமைக மாதோ.

[*மா கனகமலை—பெரிய பொன்மலை. மலையரசன் மகள்—உமாதேவி. கோகனகம்—தாமரை. மாகம் நவில்—விண்ணோர் புகழும். அமரர் படைக்கலம்—தெய்வாஸ்திரம். ஆகனகச்சிவன்—ஆக்கம் தருபவனும் பாவமில்லாதவனுமாகிய சிவன். அனகம்—குற்றமில்லாமை. புலப்பரி — இந்திரியங்களாகிய குதிரைகள். நேத்திரர் — சாரதிகள், குதிரைப் பாகர்கள்; கண்களுமாம்.*]

குண்டலங்கள்

6 சண்டிகவு ளினில்முத்தந் தரும்போது
தினவொழியத் தாம் உராயும்,
கொண்டிலகு கனமணியின் கூட்டத்தில்
எழுமொளியால் குலவு வெம்மைச்
சண்டனொளி மண்டலமே போலும்அடி
யார்உளத்திற் றமசை நீக்கும்
அண்டர்பதி தொழுசிவனார் குண்டலங்கள்
மேன்மையுமக் களித்து வாழ்க,

[சண்டி — பராசக்தி. வெம்மைச்சண்டன் — சூரியன். தமசு—இருள். அண்டர்பதி—தேவேந்திரன். உராய்வனவும் போல்வனவும் நீக்குவனவுமான குண்டலங்கள் என இயையும். உராயும் போலும் நீக்கும் குண்டலங்கள் என்க.]

திருமுக்கு.

7 வாயாகு முழைநுழைய விழைந்துபடம்
விரித்துயிர்க்கும் வாள ராவோ
காயாத முககனக கமலமடுக்
கவின்றகரு ணிகையோ என்ன
வேயாகிப் புடையுயர்ந்து தூயதாய்
விளங்கு வதாம் எம்பிரான்கை
வாயாகும் கட்டுவாங் கன்முக்கும்
வினைநீக்கி வாழ்க மாதோ.

[திருமுக்கு, வாயாகிய முழையில் நுழைய விரும்பும் பாம்பு போல்வது எனவும் முகமாகிய பொற்றாமரைப் பூவின் நடுவில் இருக்கும் பொகுட்டுப் போல்வது எனவும் கூறப்பட்டது.

கருணிகை—பொகுட்டு. கட்டுவாங்கம்—நுனியில் எலும்பு குத்தியுள்ள தண்டம்.]

திருக்கபோலங்கள்

8 என்னேயின் னொருத்தியையிங் குடையான்வைத்
துடையானென் றிமயப் பாவை
தன்னேர்சா லுருக்கண்டு சமுசயிக்கக்
கண்ணாடித் தன்மைத் தாகி
மின்னேர்சால் பத்தாநாள் வளர்பிறைபோல்
விளங்குவவாம் விண்ணோ ரேத்தும்
பொன்னேரும் சடைக்கங்கை பொதிந்தபிரான்
கன்னமுமைப் புரக்க மாதோ.

[சிவபெருமானது, கண்ணாடி போன்ற கன்னத்தில், தன்னுருவின் நிழலையே கண்டு அதனை வேறொருத்தி என நினைந்து பார்வதி ஊடல் கொள்கின்றாள். சிவனது கன்னம் பத்தா நாள் வளர்பிறை போல்வது.

இமயப்பாவை — பார்வதி. தன் ஏர்சால் உரு — தனது அழகு நிறைந்த உருவம். மின் ஏர்சால் – ஒளியும் அழகும் மிகுந்த.]

திருவதரம்

9 மாலாழி மனத்தினளாய் மலையரையன்
மகள்பருகும் வனப்பிற் ருகிப்
பாலாழி யுடன்பிறந்த பான்மையினுல்
பரன்களத்திற் பந்தப் பட்ட
ஆலாலந் தனைக்காணு மாசையினுல்
அமர்ந்தகவுத் துவமே போன்று
மேலான செவ்வொளியெண் டிசைப்பரப்பும்
உதடளிக்க மேலாஞ் செல்வம்

[மால் ஆழி—காதற் கடல். வனப்பு—அழகு. பாலாழி—பாற்கடல். பான்மை — தன்மை. ஆலாலம் — கடல்விடம். கவுத்துவம்—திருமால் மார்பிலணிந்துள்ள செம்மணி.

கவுத்துவமும் ஆலாலமும் பாற்கடலில் தோன்றியவை. தன்ெனுடு பிறந்த விடம் சிவன் கழுத்திற் சிறைப்பட்டிருப்பதால் அதைக் காண வந்திருக்கின்ற கவுத்துவ மணிபோல் இருக்கின்றது சிவனுடைய உதடு.]

பல் வரிசை

10 முகமதியத் துதிக்கின்ற மொழியமுதின்
நுரைபோல விளங்கிக் காந்தி
மிகமதியின் நிலவுதள வினைவென்று
மாசின்றிக் கூர்மை மேவி
அகநெகிழத் தொழுமசுரன் வாயிலோன்
திருவாயி லமர்ந்த பல்லின்
நகைவரிசை யுமக்கருள்க ஒருகாலு
நசியாத நலங்கள் தாமே

[தளவு — முல்லையரும்பு. அசுரன் — வாணாசுரன். வாயிலோன் — வாயிற் காப்போன். நகை — சிரிப்பு. நசியாத — அழியாத.

வாணாசுரனது பத்திவலையிற் பட்டுச் சிவபெருமான் அவனுக்கு வாயிற்காவலனாக இருந்தான்.]

நாதம்.

11 அவ்வியத்த வடிவன்உல கனைத்தினுக்கும்
நாதன்உமைக் காவிநாதன்
செவ்வியவா யிடைத்தோன்றிச் செறிபருவ
முகில்முழக்கும் திரைமிக் கோங்கும்
பவ்வமுழக் கும்குறைத்துப் பரப்பிரம
மாய்த்தெளிவாய்ப் பலவாய்த் தோன்றும்
எவ்வுயிர்க்கும் தெளிவருளும் நாதமுமக்
கினிப்பிறவி யில்லை ஆக்க

[*அவ்வியக்தம் — மூலப்பிரகிருதி. ஆவிநாதன் — பிராண நாயகன். பவ்வம்—கடல். பரப்பிரமம்—ஓங்காரம். நாதம்— குரலோசை.*]

அட்டகாசம்

12 முட்டவா னளவுயர்ந்த நுரைக்கடலுள்
முழ்கியென வுலக முற்றும்
விட்டபே ரொளியினதாய்ப் பல்வரிசை
விளங்குவதாய் விமலக் கங்கைப்
பட்டநீள் வெள்ளமெனப் பரவுவதாய்
அஹஹவெனப் பயஞ்செய் பாற்றாய்
அட்டவா னுருவனட்ட காசமுமக்
கென்றுமின்ப மளிக்க மன்றே.

[முட்டி—தொடும்படி. கங்கைப்பட்ட—கங்கையில் தோன்றிய அட்டவான் உருவன்—எட்டுப் பெரிய வடிவன். அட்டகாசம்—பெருஞ்சிரிப்பு]

திருமுகங்கள் ஐந்து.

13 குடதிசையில் வெண்ணிறமாய்க் குலவுசத்தி
யோஜாத முகமும் பொன்போல்
வடதிசையில் வயங்குகின்ற வாமதே
வமுமுகிலின் வண்ண மாகி
அடல்புனையுந் தென்பாலி னகோரமுக
முங்கிழக்கில் அருண னேபோல்
விடுமொளித்தற் புருடமுகம் விண்ணோக்கீ
சானமும்நும் விருப்ப மீக

[சதாசிவமூர்த்திக்கு ஐந்து திருமுகங்கள். அவை —
மேற்குத் திசையில் சத்தியோ ஜாதம், வெண்ணிறத்தது. வடக்கில்
வாமதேவம், பொன்னிறத்தது. தெற்கில் அகோரம், கருநிறத்தது
கிழக்கில் தற்புருடம், இளஞ்சூரியன் நிறத்தது. உச்சியில் வானை
நோக்கியது. ஈசான முகம், பளிங்கு நிறத்தது]

திருக்கழுத்து

14 தன்பாற்கொள் காதலினுற் சாம்வனனி
யஞ்சனத்தால் சயிலப் பாவை
அன்பாக விடுங்கீற்று மூன்றிதென
வரிமூன்றும் அவிர்வதாகிப்
பொன்பானு மணியணியி ெனுளிவீசிச்
சங்கினுருப் பொற்பிற் ருகி
மின்போலு மிடையுமைதன் கொழுநன்மிட
றுமதுளத்தில் விளங்க மாதோ

[சாம்வனனி என்பது ஒருவகை மை. உத்தம புருடர் கழுத்தில் மூன்று ரேகைகள் இருக்கும். இறைவன் கழுத்தில் உள்ள அந்த ரேகைகள், அன்பினுல் உமையாள் சாம்வனனி மையால் எழுதிய கோடுகள் போல் உள்ளன. கழுத்துக்குச் சங்கு உவமை. பொன்னுலும் மணிகளாலும் ஆகிய அணிகலன் இறைவன் கழுத்திற்கிடந்து பிரகாசிக்கின்றன. மிடறு—கழுத்து]

திருக்கழுத்து நஞ்சு

15 உடன்பிறப்பாம் வாஞ்சையினால் முகமதிபல்
லொளித்திருச்செவ் வுதடா மாலோன்
தடமணியென் பவற்றினரு கினிலிருக்கும்
விருப்பினதாய்த் தங்கும் காள
விடமுறையு மிடறுவிட்டுக் கீழிறங்கா
விதம்தடுத்த விமலை தாலி
திடமிகுக்க வாழ்த்துவது நுமதுளத்திற்
கறையனைத்தும் தீர்ப்ப தாக

[சந்திரன், திருமகள், கவுத்துவமணி ஆகியவை கடலிற் பிறந்தமையால் ஆலகால விடத்துக்கு உடன் பிறப்பு ஆவன. சிவபெருமானது, முகமான மதியையும் பல்லொளியாகிய திருவினையும் உதடாகிய செம்மணியினையும் விட்டு நீங்காமல் அருகிலே சிவன் கழுத்தில் இருக்க ஆலகாலம் விரும்பிற்று. அதற்கேற்ப, உமையாள் அவ்விடத்தை அவ்விடத்தைவிட்டுக் கீழிறங்காமல் தடுத்து நிறுத்தினாள். அந்நன்றி கருதி விடம் அவள் என்றும் சுமங்கிலியாய் வாழ்க என வாழ்த்துகிறது.

திரு—அழகு, திருமகள்.]

திருத்தோள்கள்.

16 உண்ணிறைந்த பெருங்காத லுடையமதி
முகவுமையாள் உடலொன் ருக
அண்ணியணைந் திடவளைகள் அழுந்தியுறு
தழும்பினழ கவிர்வ வாகித்
திண்ணியவாய் மணிப்பணநா காங்கதங்கள்
பொலிகின்ற திருத்தோள் நீவிர்
பண்ணியவாம் பெரும்பாவக் குவையையழித்
தினியவருள் பயத்தல் வேண்டும்

[*அண்ணி-நெருங்கி. அவிர்வ-விளங்குவ. நாக அங்க தங்கள்-பாம்பாகிய தோள் வளைகள். குவை — குவியல். பயத்தல்—கொடுத்தல்.*]

திருக்கைகள்

17 தன்காதற் றிவிதலத்தைத் தழுவவெழு
சானவியின் தரங்க வெள்ளம்
வன்பாவக் கடல்கடக்க விட்டபளிக்
கணைபுவன மனைசேர் விட்டம்
இன்பான உவமையவாய் இபமுரித்த
திறலினவாய் ஏற்ற யாவும்
அன்பானர்க் கருளுமரன் திருக்கரநும்
பவக்குவையை அழிப்ப வாக

[திருக்கூத்தாடுங் காலத்துச் சிவபெருமான் நீட்டிய கைகள், வானில் ஓடும் கங்கை நதியின் வெள்ளம்போலிருக்கின்றன. பாவக் கடலைக் கடப்பதற்கு அணைபோலவும், புவனமாகிய வீட்டிற்கு விட்டம்போலவும் இருக்கின்றன.
திவிதலம்—விண்ணுலகம். சானவி—கங்கை.]

திருமார்பு.

18 வணங்குநுணங் கிடைமலையின் மகள்மார்பிற்
சந்தனமும் நீறுங் கூடி
இணங்குமொளி மணிப்பணிப்பூண் இனவொளியா
லிரட்டிக்கும் எழிலிற் ருகி
வணங்கெழுமு தெளிபளிங்கின் மலைபோலும்
சிவன்பெரிய மார்பு நும்மை
அணங்கவினை கொடும்பாவக் குழுவையெலா
மிகவிரைவி லழித்துக் காக்க

[*நுணங்கு இடை—சிறுத்த இடுப்பு. மணிப் பணிப்பூண்—இரத்தினத்தை தலையிலுடைய நாகாபரணங்கள். இனம்-கூட்டம் எழில்—அழகு. அணங்க—வருத்தும்படி.*

திருவயிறு.

19 மணியார நிலவியழ கியமடிப்புத்
திரைபொலிந்து வாங்கு முந்தி
அணியார்ந்து புரள்பாம்பு மமர்ந்தொளியாம்
திருவுறையு மகமு மாகித்
திணியான விருளகற்றுஞ் சீதநிலா
எறித்துயர்பாற் கடலே போலும்
மணிநீல கண்டனெழில் வயிற்றினில்நும்
மனமால்கண் வளர்க மாதோ.

[சிவபெருமானாரது திருவயிற்றிற்கும் பாற்கடலுக்கும் சிலேடை. பாற்கடலில் மணி—இரத்தினம். ஆரம்—முத்து மடிப்புத்திரை—மடிப்புகளுடைய அலைகள். வாங்கும் உந்தி—வளைந்த நீர்ச்சுழிகள். திரு—லக்ஷ்மி. சீதநிலா—குளிர்ந்த நிலா. மால்—திருமால். கண்வளர்தல்—தூங்குதல்.

சிவபெருமான் வயிற்றில் மணியும், முத்தும், மூன்று மடிப்பும் பாம்பும் ஒளியாகிய திருவும் கொப்பூழாகிய சுழியும் உள்ளன. அவ்வயிறாகிய திருப்பாற்கடலில் உங்கள் மனமாகிய திருமால் பள்ளிகொள்க என்க.]

திருவரை.

20 பனிமலையின் றாழ்வரையிற் கருமுகிலும்
பனிநிரையும் படர்ந்தா லென்ன
முனிமலையின் புலியின்வரித் தோலுடுத்து
மூசிடுமா சுணக்கச் சார்த்து
நனிமலையின் மகளாடற் கிடமாய
இளம்பிறைசூ டியநம் பெம்மான்
இனியதிரு வரைச்சூழல் இடர்பாவம்
நீக்கியுமக் கின்ப மீக.

[சிவபெருமானுடைய திருவரையிற் புலித்தோல் உடை பொருந்தியிருக்கிறது. அது இமயமலையின் தாழ்வரையில் கரிய மேகமும் பனியின் படலமும் கலந்து படர்ந்தது போலுள்ளது. முனி—சினக்குப். மலையின்புலி—மலையில் வாழும் புலியினது. மாசுணக் கச்சு—பெரும் பாம்பாகிய கச்சை. ஆர்த்து—கட்டி.]

திருத்தொடைகள்.

21 பருத்தசக னத்தினெடு சகமூன்றும்
பரிக்கின்ற தம்பம் போல
உருத்தரித்துத் திரண்டுசுரர் பதியானைக்
கைந்நாண ஒளிர்ந்து மாற்றார்
வெருத்தரிக்கச் செய்துதிரு நீற்றினொளி
யால்வெளுத்து விளங்கி யன்பர்
கருத்திருத்தும் புரப்பகைவன் திருத்தொடைநீர்
விழைபவெலாம் கனிந்து நல்க.

[சகனம் — தொடையின் மேற்பாகம். சகம் — உலகம். தம்பம் — தூண். உரு தரித்து — வடிவத்தைத் தாங்கி. சுரர்பதியானை — தேவேந்திரனது யானையாகிய ஐராவதம். மாற்றார் — பகைவர். வெருதரிக்க — அச்சம் கொள்ள. புரப்பகைவன்—திரிபுராரி, சிவன். விழைப—விரும்பியவை.]

முழங்கால்கள்.

22 அந்தணர்தம் சிந்தையெனும் ஆடிவைக்கும்
சந்திரகாந் தக்கற் பேழை
சந்தநட னத்தில்வளை வுறுகாலை
அரையரவு தலையை வைக்கும்
சந்தவணை யெனவிளங்கித் தன்னொளியால்
அமுதமதி சயிப்ப வாகும்
அந்தகனை யுதைத்தபிரான் முழங்கால்கள்
நுமக்கின்பம் அளிக்க மாதோ.

[இறைவனுடைய முழங்கால்கள், முனிவர்கள் தம் மனமாகிய கண்ணாடியை வைத்தற்குரிய சந்திரகாந்தக் கல்லால் ஆகிய பேழை போன்றவை. திருக்கூத்தாடும்போது வளைந்தால் அம்முழங்கால்களின்மேலே, இடுப்பிற் கட்டிய பாம்புகள் தலையை வைத்துக் கொள்ளுதற்குத் தலையணைபோல இருக்கின்றன. வடிவாலும் ஒளியாலும் சந்திரனைச் சயிக்கின்றன. (அமுதம் அதிசயிப்ப— அமுதம் வியப்ப எனவுமாம்) அந்தகனை—யமனை.]

முன்னங்கால்கள்.

23 கிண்கிணியா கியவரவக் குழுப்படத்திற்

கிளர்மணியின் ஒளியாற் செவ்வே

தண்டுளிர்கள் விடுவனஉள் ளங்கவர்வ

தேவரெலாம் புகழ்வ தாவில்

வண்படிகத் தூண்போல்வ சங்கநில

வெனஒளிர்வ வைகூர் சூல

ஒண்கரத்தான் கணைக்கால்கள் உமதுளத்தில்

ஒழியாமல் உறைக மாதோ.

[*பாம்பின் படங்களே கிண்கிணிகளாக இறைவன் காலில் அமைந்துள்ளன. படத்தின்மேல் இருக்கும் மாணிக்கம் செவ்வொளி விடுவது மரத்தில் செந்துளிர் விடுவதுபோலும். சங்கும் நிலவும் போல வெண்மையாய் விளங்குவ*]

பறடு

24 நிறைதோமஞ் சத்திரமா தியதுதியும்
நிறையுணர்ச்சி விதங்க ளான
குறையோவு வெகுமதியுங் குவித்தென்றும்
தேவலரா தியமெய் யன்பர்
முறையோடு வழிபட்டுச் சூழ்வவொளி
மொய்ப்பசிவன் பறடி ரண்டும்
துறைதோயு நிறைகயத்தி லாமையென
நுமதுளத்திற் றுளைந்து வாழ்க.

[ஸ்தோமம் சத்திரம் என்பவை வேள்விகளில் ஓதப்படும் இருவகை மந்திரங்கள்

உணர்ச்சி விதங்கள்—மனவுணர்வுகள் வெகுமதி—காணிக்கை தேவலர் என்பவர் சிவபக்தி மிக்க ஓரிருடி. கயம்—நீர்நிலை. துளைதல்—நீரில் மூழ்கி விளையாடுதல்.]

திருவடி விரல்கள்.

25 தடவரையைப் பெயர்க்கமுயல் தசமுகன்வாய்
குருதிபெருஞ் சலதிபோல
மடமடென வுகநடுங்கிக் கதறநுனி
யால்அழுத்தும் வலிமை வாய்ந்த
படவரவ மோதிரத்த தீவினையைத்
தீவினைசெய் பண்ப வாச
மடலவிழ்மல் லிகைமொய்ப்ப நுதல்விழியான்
கால்விரல்கள் வழங்க மேன்மை.

[*தடவரை — கைலாயமலை. தசமுகன் — இராவணன். குருதி—இரத்தம். சலதி — கடல். தீவினைசெய்பண்ப—எரிக்கும் தொழிலைச் செய்யும் இயல்பினுடையவை. நுதல் விழியான் — நெற்றிக்கண்ணன், சிவன்.*]

கால்விரல் நகங்கள்.

26 தொழுமமரர் குழுமுடியின் முழுமணியிற்
றேன்றுமொளி நீரா ரத்தி
விழைவிளெடு சுழற்றுவன நுனிநிமிர்ந்த
விண்மீனம் விழையு மேர,
தழைகருமை மிடற்றிறைவன் தாமரைத்தாள்
இணையிதழ்நேர் விரலைச் சார்ந்த
எழில்நகத்தின் வரிசையுமக் கெந்நாளும்
இனியசுகம் ஈக மாதோ.

[இறைவன் திருவடியில் தேவர்கள் விழுந்து வணங்கும்போது அவர்தம் கிரீடத்தின் மணி ஒளிகள் வீசுவது அத்திருவடிக்கு தீப ஆரத்தி எடுப்பதுபோல் உள்ளது.

விண்மீனம் — நக்ஷத்திரங்கள். கருமைமிடற்று இறைவன் — நீலகண்ட சிவன்.]

திருவடிகள்.

27 எந்தத்தா மரைநன்மலர் சதிமுகசந்
திரனருகில் இருந்தும் செவ்வி
சிந்திப்போ காஅமரர் மனத்தடத்தில்
சேர்ந்துதிருச் சேர்ப்ப தூய
புந்திப்பே ராயவிசை யளிமுரல்வ,
வெண்ணீற்ருற் பொலிவ, வான
அந்தத்தா மரைமலராம் சிவனடிகள்
அளிக்கநுமக் களவில் செல்வம்.

[சதி—பார்வதி தேவி தேவியின் திருமுகமாகிய சந்திரன் அருகில் இருந்தும் சிவன் அடியாகிய தாமரை மலர் குவிவதில்லை அத்தாமரை தேவர்தம் உள்ளத்தடத்தில் மலர்வது. ஞானியராகிய வண்டுகள் மொய்ப்பது, தூயபுந்திப்போர்—ஞானிகள். அளி—வண்டு.]

28 எவற்றருளால் விருப்புவெறுப் பிலராகி
யெதிகள்கதி யெய்து கின்றார்
எவற்றையட்ட மூர்த்திகழல் இறைஞ்சினவர்
சேடமென எய்தி வாழ்வார்
எவற்றையிறை திருவடிச்செந் தாமரைப்பூந்
தாதுவென இமையோர் ஏற்பார்
அவற்றினரு ளாற்பிறவிக் கடல்கடந்து
முத்தியினை யடைவீர் மாதோ.

[எதிகள் — முற்றத்துறந்த முனிவர்கள். அட்டமூர்த்தி— எண்வகை யுருவினன் ஆகிய சிவபெருமான். சேடம்—பிரசாதம் திருவடிச் செந்தாமரைப் பூந்தாது—சீபாததூளி.]

சிவவொளி

29 எதன்பெருமை புவனமெங்கு நிரம்பியுள
துலகிலுள வொளிகட் கெல்லாம்
எதனொளி மேலான,தரு மறைப்பொருளா
யிருப்பதெது, எவற்றி னுக்கும்
எதுமுதலாவது, குணங்கள் விருப்புவெறுப்
பில்லாத தெது,வொப் பற்ற
தெது,ககன மெதுவதுவாம் பரமசிவ
வொளியுளிருள் இலதாய்ச் செய்க.

[குணங்கள் — சத்துவம், ராஜஸம், தாமசம் என்னும் முக்குணங்களில் ஒன்றும் இல்லாதது. ககனம் — உணர்வதற்கு அரியது.]

சிவகேசாதி பாதாந்த வருணன ஸ்தோத்திரம் முற்றிற்று.

திருஞானசம்பந்தன் சேவடி வாழ்க.

ஸ்ரீ தசஸ்லோகீ ஸ்துதி.

எழுசீரடி யாசிரிய விருத்தங்கள்

1 சாம்பனே எங்கள் தொழுகுலம் சாம்ப
பசுபதி யாங்களுன் தமர்காண்
சாம்பனைப் புகழ்வேன் சாம்பனல் தேவர்
ஆதியர் பரகதி சார்வார்
சாம்பனுக் காக இத்துதி என்றும்
சாம்பனிற் பிறரையான் சாரேன்
சாம்பன தடியேன் பரம்பொரு ளாய
சாம்பன்பால் தழைகபே ரன்பே

[தசஸ்லோகி என்ற இப்பனுவல் பரமேஸ்வரனது தனித் தலைமைத் தன்மையை விளக்கி மொழிவது. "சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோம் அல்லோம் சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்" (அப்பா சுவாமிகள்) என்று இறுமாந்து கூறும் பெருவாழ்வு அளிப்பது.

இம்முதற்பாட்டில் ஒன்றுமுதல் ஏழு வேற்றுமைகளும் வரிசையாய் அமைந்திருக்கும் அழகு காண்க. சாம்பன் என்ற பெயர் அம்பாளுடன் கூடியவன் என்று காரணப்பெயராய்ச் சிவபெருமானை உணர்த்தும். கண்ணனும் இப்பெயராற் சிவனைப் போற்றி அவன் அருளால் ஆண்மகவு எய்திச் 'சாம்பன்' என்ற இப் பெயரையே அம்மகவுக்கு இட்டு மகிழ்ந்தான்.

தொழுகுலம்—குலத்திற் பிறந்தார் அனைவரும் தொழும் தெய்வம். பசுபதி—அரிபிரமாதியர் முதலாக அனைத்துயிர்களும் பசுக்களே அப்பசுக்கள் அனைத்துக்கும் பந்தம் வீடளிக்கும் அரன் ஒருவனே பதி. பரகதி—மேலாம்கதி. சாம்பனில்—சாம்பனை அன்றி.]

2 முப்புரத் தாருக் காற்றகில் லாது
முராரியா தியர்சரண் புகுந்தே
ஒப்பறு பகவ பசுக்களேம் ஈசன்
ஒருவன்நீ காத்தருள் என்று
செப்பவே புரங்கள் செற்றவர் பதவி
சிதைவுறு தளித்தபேர் அருளான்
அப்பரம் பொருளாம் சாம்பன்பால் என்றன்
அகந்திளைத் தின்பமார்ந் திடுக

[திரிபுரத்தை எரித்து அரிபிரமர் முதலியோருக்கு அவரவர்தம் பதவியை அளித்த சிவனாரின் பெருங்கருணைத்திறமை போற்றப் பட்டது.

ஆற்ற கிலாது — எதிர் நிற்கமாட்டாமல். முராரி — திருமால். செற்று—அழித்து]

3 வையமே வையம் சந்த்ரசூ ரியரே
வலியசக் கரங்கள்பொன் மலையே
எய்யும்வில் மாலோன் கணைவிதி பாகன்
எறிதிரைக் கடல்கணைப் புட்டில்
துய்யநான் மறைகள் துரகதம் பாம்பே
தொடுத்தநாண் எனஎவற் கான
ஐயனைச் சாம்ப பரபிர மத்தை
அடைந்தின்பம் ஆர்கஎன் மனனே.

[இறைமைக்கேற்ற கருவிகள் கூறப்படுகின்றன ; வையமே வையம் — பூமியே தேர். மாலோன்கணை—திருமாலே அம்பு. விதிபாகன்—பிரமாவே தேர்ப்பாகன். கணைப்புட்டில்— அம்பறாத்தூணி. துரகதம்—குதிரை]

4 அங்கசன் அங்கம் அட்டவெள் அடலை
அரியமெய் அங்கரா கத்தான்
பங்கசன் தலையே பைம்பொரு ளாய
பரிகலன் எனஅங்கைப் பரித்தோன்
மங்கல மலராள் மகிழ்நனெண் கண்ணே
வழிபடு மலரென மகிழ்ந்தோன்
எங்களின் சாம்ப பரபிர மத்தை
எய்தியின் பெய்துக மனனே.

[ஈசனார்க்கு இனியவை சில :

அங்கசன்—மன்மதன், அங்கம் அட்ட அடலை—உடம்பை எரித்த சாம்பல், அங்கராகம் — உடற்பூச்சு, பங்கசன் — பிரமன், பரிகலன் — உண்கலன், வழிபடுமலர் — பூசைக்கேற்ற பூ. இச்செய்யுளின்கண் சிவபெருமான் காமனையும், பூமனையும் (பிரமாவையும்) மாமனையும் (மா + மன் — திருமால்) அடக்கி ஆண்டு அருளவல்லான் என்பது புலப்படும்.]

5 முந்துகோ விந்தன் அன்றிஒன் றில்லை
முதலென மொழிமறை முனிவர்
தந்தலை யாய வியாதனிள் கைகள்
தம்பமாச் சபித்தசொற் சதுரன்
நந்தியெம் பெருமான் எவரையும் நம்பன்
நாண்மலர்க் கழல்தொழு விப்போன்
வந்தனைக் குரிய பரம்பொருள் சாம்பன்
மலரடி மலர்களென் மனத்தே.

[சிவபரத்துவத்தை மறுத்துப் பொய் சொன்ன வியாசன் தண்டனை பெற்ற செய்தி காண்க:

முந்து—முன்னாளில், முதல்வனை. கோவிந்தன்—திருமால், முனிவர்தம்தலை—முனிவரில் முதலாயவன், வியாதன்—வியாச முனிவர், சதுரன்—வல்லாளன், தம்பம் ஆகச் சபித்த—ஸ்தம்பிக்கும்படி சாபம் இட்ட.]

6 வானமே குஞ்சி நாலிரு திசையும்
மருங்குலார் அருந்துகில் பிறையே
தான்அணி கண்ணி அந்தமில் இன்பம்
தன்னுரு மறைமுடி யுறையுள்
வானவர்குவித்த கைம்மலர் கழற்பூ
மன்னுயிர் அனைத்துந்தன் அடியர்
ஆனவன் சாம்ப பரபிரமத்தை
அடைந்தின்பம் ஆர்கவென் மனனே.

[இறைவனுக்கு வானமே தலைமயிர், திசைகள் எட்டுமே ஆடை, கண்ணி—நெற்றி மாலை, முடிவில்லாத இன்பமே திருவுருவம், வேதாந்தமே வாழுமிடம், தேவர்கள் அஞ்சலித்த கைகளே காலில் அருச்சித்து இட்ட மலர்கள், உயிர் எல்லாம் அடிமைகள்.]

7 ஆயிரந் திருப்பேர் வழுத்திமால் கமலம்
ஆயிரம் நாடொறுஞ் சாத்தும்
தூயஅர்ச் சனையில் ஒருமலர்குறையச்
சூன்றுதன் கண்மலர் சாத்த
ஆயிரம் பருதிப் பேரொளி ஆழி
அளித்துல களிக்குமா றமைத்தோன்
ஆயவச் சாம்ப பரபிரமத்தை
அடைந்தின்பம் ஆர்கவென் மனனே.

[திருமால் நாடொறும் ஆயிரம் தாமரை மலர் கொண்டு ஆயிரம்பேர் சொல்லி அருச்சித்து வருநாட்களில் ஒருநாள் ஒரு மலர் குறையவே தம் கண்ணையே ஒரு மலராகக் கருதி இடந்து இட்டு அருச்சிக்கவே சிவபெருமான் மகிழ்ந்து அத்திருமாலுக்குச் சக்கரம் கொடுத்தருளிய வரலாறு கூறப்பட்டது
பருதி—சூரியன், ஆழி—சக்கரம்.]

8 அடிமலர் காணப் பன்றியாய் முயன்ற
அரிபுகல் வாய்மையால் அவனை
முடிவரு முலகம் அனைத்தையும் ஆளும்
முறைமையில் வைத்தவன், பிரமன்
நெடுமுடி காண்பான் அன்னமாய்ப் பின்னர்
நிசமல சொலமுனிந் தொறுத்த
அடிகளாம் சாம்ப பரபிர மத்தை
அடைந்தின்பம் ஆர்கவென் மனனே.

[*திருவடிகாணப் பெறுமல் வருந்திப் போற்றிசைத்த திருமாலை மூவுலகமும் தொழுந்தெய்வம் ஆக்கி, முடிகண்டேன் எனப் பொய் புகன்ற பிரமாவுக்கு பூசை இல்லையாக்கினன் சிவபெருமான்.*]

9 மண்புனல் நெருப்பு வளிநெடு வானம்
மதிகதிர் உயிர்என நிலவும்
எண்பெரு வடிவும் தன்னலாற் பிறிதொன்
றின்றிநின் றவன்மறை முடியும்
கண்ணிய ஓங்கா ரப்பொருள் துரியன்
சிவன்எனக் கட்டுரை புகலும்
அண்ணலாம் சாம்ப பரபிர மத்தை
அடைந்தின்பம் ஆர்கவென் மனனே.

[சிவபெருமான் அட்டமூர்த்தியாய் அமர்ந்தவன். அவன் அன்றி ஒன்றும் இல்லை. உபநிடதங்கள் அவனையே பிரணவத்தின் பொருளாகவும் துரியப்பொருளாகவும் வாய்மை கூறுகின்றன.]

10 மாலவன் பிரமன் இந்திரன் முதலோர்
வாரிதி நஞ்சுகண் டஞ்சி
ஓலமென் றடையப் புகலடைந் ததனுல்
ஒருகணத் துறுதுயர் துடைத்து
நீலகண் டப்பேர் பெற்றவெம் பெருமான்
நின்மல ஞானநன் குணர்த்தி
ஆலமர் சாம்ப பரபிர மத்தை
அடைந்தின்பம் ஆர்கவென் மனனே.

[*சிவபெருமான், ஆலகாலமுண்டு அமரரைக் காத்து நீலகண்டனுகிய வரலாறு கூறப்பட்டது.*]

ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அருளிச் செய்த
ஸ்ரீ தச சுலோகீ ஸ்துதியின் மொழிபெயர்ப்பு முற்றிற்று

மனமகிழ்ச்சி.

வெண்பா

செந்தமிழு மாரியமுந் தேர்பயன் கைசேர்ந்தோம்
சிந்தை சிவத்திற் றிளைத்துய்ந்தோம் — அந்தமில்சீர்ச்
சங்கரா சாரியன் சாற்று சிவன்பெருமை
பொங்கு தமிழிற் புனைந்து.

திருஞான சம்பந்தன் சேவடி வாழ்க.

இந்நூல் கிடைக்குமிடம்:-

1) கவியரசு - வித்துவான்

கு. நடேச கவுண்டர் அவர்கள்

84 காந்திபுரம் நான்காவது வீதி

கோயம்புத்தூர்–12

✷

2) திரு. **K. சென்னியப்ப கவுண்டர்**

"பத்மாலயா நிதி"

55 காந்திபுரம் எட்டாவது வீதி

கோயம்புத்தூர் – 12

பாரதி அச்சகம், ஒப்பணக்கார வீதி, கோவை.